


# 1

'திருமணம் என்கிற சொல்லுக்கு இவ்வளவு சக்தி இருக்கிறதா...?'

-கங்கா, தனக்குள் வியந்து போனாள்.

முப்பத்தி நாலு வயசுக்குள் அவள்தான் எத்தனைக் கல்யாணங்களைப் பார்த்திருக்கிறாள்!

அய்யர் மந்திரம் சொல்ல - அம்மி மிதித்து அருந்ததி பார்த்து நடக்கும் சம்பிரதாயக் கல்யாணம்... பாதி ராத்திரிக்கு மேல் தலையில் சரிகைக் குல்லாயும், முகத்தை மறைக்கும் மல்லிகைச் சரமுமாய் மாப்பிள்ளை குதிரை மீதேறி வர - மணப்பெண் சல்லாத்துணியினால் முகத்தை மூடி வெட்கத்துடன் தோழிக்குப் பின்னால் ஓடி ஒளிய... இப்படி சில திருமணம்...! தரையைப் பெருக்கும் வெள்ளை கவுனும், தலையில் அலங்கரிக்கப்பட்ட கிரீடமும் அணிந்து இருபுறமும் இரண்டு சின்னஞ்சிறு பெண்குழந்தைகள் - மணப்பெண் போலவே அலங்கரித்து, கையில் மெழுகுவர்த்தியை ஏந்தி வர... கோட்டும் சூட்டுமாய் மணமகன் பாதிரியாரின் எதிரில் முகம் முழுக்கக் குதூகலமுமாய் நிற்க... இப்படிச் சில விவாகங்கள்...!

இதோ போன வாரம் கூட, கார் டிரைவர் சுடலை முத்து தனது மகளுக்கு கல்யாணமென்று அழைப்பு வைத்துவிட்டுப் போனான்.

**பாப்பநாயக்கன்பட்டி பிச்சாண்டியின் பேத்தியும் - சுடலைமுத்துவின் மூத்த குமாரத்தியுமான திருநிறைச் செல்வி விஜயலட்சுமியை... பேராவூரணி கதிரேசனின் பெயரனும் - தில்லை மாவு மில் குப்புசாமியின் இளைய மகனுமான திருநிறைச் செல்வன் அர்ச்சுனனுக்கு திருமணம் செய்வதாய்... பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு.. மேற்படி முகூர்த்தம்...**

வெற்றிலை பாக்கு பழங்களுடன் தட்டில் முகூர்த்தப் பத்திரிகையையும் வைத்துவிட்டு கங்காவின் எதிரில் அடக்கமாய் கைகட்டியபடி சுடலைமுத்து அன்று நின்றானே...

''அம்மா... கல்யாணத்துக்கு அவசியம் வந்திடணும்.''

''கட்டாயம் வர்றேன் சுடலை.''

கங்கா முறுவலித்தாள்.

''அய்யாவைப் பத்தி உனக்குத் தெரியாதா சுடலை... ராத்திரி வீட்டுல இருப்பாரு.

காலையில திடீர்னு பெட்டி படுக்கையத் தயார் பண்ணும்பாரு... இருந்தாலும் நான் எப்படியாவது அவரையும் அழைச்சிட்டு வரப் பார்க்கறேன்.''

அவன், பெரிய கும்பிடாகப் போட்டுவிட்டு நகர்ந்தான். அப்போதே,

அவனை நிறுத்தி வைத்துச் சொல்ல வேண்டும் போல் இருந்தது.

'சுடலை... இதே மாசம் கடைசி முகூர்த்தத்துல...'

நாக்கு நுனி வரையில் வந்த வார்த்தைகளை மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள் அவள்...

இப்பொழுதும் அதை நினைக்கையில் சிரிப்பு வருகிறது அவளுக்கு.

இந்த வீட்டுக்குள் அவள் அடியெடுத்து வைத்து பதினாறு வருடங்கள் ஆகியிருக்குமா?

அப்பொழுதும் சுடலைதான் சுந்தரத்தின் கார் டிரைவர்.

'கங்கா, சுடலை என்னைப் பள்ளிக்கூடத்துல சேர்த்த நாளுலேயிருந்து எனக்கு டிரைவரா இருக்கான். ஆச்சர்யமா இருக்கா? எங்கப்பா பயங்கர பெர்ஃபெக்ஷன்... அவர் காரை வேற யாரும் உபயோகிக்கக் கூடாது. அம்மாவையும் என்னையும் பார்ட்டிகளுக்கும், விருந்துகளுக்கும் அழைச்சிட்டுப் போவாரே தவிர நாங்க தனியாப் போறதுன்னா அதுக்கு வேற கார்; வேற டிரைவர்தான்... அதுவும், என்னை கான்வென்ட்லே சேர்த்ததும் - எனக்குன்னு தனி கார்... டிரைவர்... எல்லாம். அப்ப வந்து சேர்ந்தவன்தான் சுடலை.'

அன்றைக்கு சுந்தரம் சொன்னது இன்னும் மறக்கவில்லை அவளுக்கு.

உண்மையிலேயே - சுந்தரத்துக்கு கங்காவை விடவும் அந்தரங்கமானவன் சுடலைமுத்துதான்.

இதை கங்காவே எத்தனையோ முறை சுந்தரத்திடம் சொல்லி, விளையாட்டாய் கோபித்துக் கொண்டிருக்கிறாள்.

சுந்தரமும் இதற்குக் குறும்பாய் கண்களைச் சிமிட்டிக்கொண்டே சொல்லியிருக்கிறான்.

'ஆமாம்மா... நீ எனக்கு இந்தப் பதினாலு வருஷமாத்தான் அறிமுகம். ஆனா சுடலை.. எனக்கு நினைவு தெரிஞ்ச நாளுலேயிருந்து பழக்கமாச்சே. என்னோட எல்லா சமாச்சாரங்களும் அவனுக்குத்தான் தெரியும். அதனாலே... உன்னை விட, அவன்தான் எனக்கு ரொம்ம்ம்பக் குளோஸ்... நெருக்க்க்கம். ஆமா...'

அது என்னவோ நிஜம்தான்.

சுந்தரத்தின் கப்பல் போன்ற பங்களாவில் உள்ள வேலையாட்கள் அனைவருமே கங்காவிடம்தான் நெருக்கம் அதிகம். எஜமானரின் எதிரில் நின்று பேசக் கூடப் பயப்படுவார்கள்.

அது மட்டுமில்லை. இன்று வரையில், சுந்தரமும் தனக்கு என்ன வேண்டுமென்றாலும் - கங்காவைத்தான் அழைப்பான். தன்னிடத்தில் எத்தனை வேலைக்காரர்கள் வேலை செய்கிறார்கள் என்பதுகூட அவனுக்குத் தெரியாது.

'கங்கா, டிபன் ரெடியா?'

'கங்கா... என்னோட ப்ரீஃப் கேஸ் எங்கே...'

'ரெண்டு நாளைக்கு கோயம்புத்தூர் போறேன். திரும்பி வந்து வீட்ல ஆறு மணி நேரம் தங்குவேன். அப்புறம் அப்படியே பாம்பே போனா - 



திரும்பி வர பதினஞ்சு நாளாகும்.'

'கங்கம்மா.. என் செல்லமே.. எனோட கண்ணாடி எங்கேம்மா...?'

'இதப் பாரு.. சாப்பிடறதுக்கு முன்னாலே என்ன மாத்திரை... சாப்பிட்டதுக்கு அப்புறம் என்ன மாத்திரையின்னு எனக்கு ஒரு மண்ணாங்கட்டியும் தெரியாது. பேசாம பொட்டலம் கட்டி வச்சுடு. பொட்டலத்துக்கு மேலேயே எதை எப்ப சாப்பிடணும்னு எழுதி வச்சிடு.'

'இத்தனைக் கஷ்டப்படணுமா நான்? அதைவிட ஒய் டோன்ட் யூ கம் வித் மீ? அஞ்சு நிமிஷம் டயம் தர்றேன். அவசரத்துக்கு ஒரு செட் புடவை, ஒரு நைட்டி, பையிலே போட்டுட்டுக் கிளம்பிடேன். போற எடத்துல உனக்கு எத்தனை புடவை, எத்தனை விதமான டிரஸ் வேணுமோ - வாங்கித் தர்றேன்.'

கங்கா இல்லாமல் வேறு வேலையாளைப் பார்த்தால் புருவத்தை உயர்த்துவான்.

'யார் நீங்க... உங்களுக்கு என்ன வேணும்?'

'அய்யா, நான் இந்த வீட்டு வேலைக்காரனுங்க.'

'அப்படியா... நான் இதுவரைக்கும் உன்னைப் பார்த்ததே இல்லையே. புதுசா வேலைக்கு சேர்ந்திருக்கியா? சம்பளம், மத்த விஷயங்கள் எல்லாத்தையும் அம்மாகிட்டே பேசிக்க என்ன... எங்கே அம்மா..? கங்கா...'

'அய்யா... அம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க. இதோ, இப்ப வந்திடுவாங்க. என்கிட்ட சொல்லிட்டுத்தான் போறாங்க. 'இதோ இப்ப வந்திடுவேன் மாது.... அதுக்குள்ளே அய்யா ஏதாவது வேணும்னு கேட்டா நீ பக்கத்துலேயே இருந்து கேட்டதை எடுத்துக்கொடு'ன்னு சொல்லிட்டு... இதோ ... இப்ப வந்திடுவாங்க அய்யா.

அய்யா... ஏதாச்சும் வேணுமா?'

வேலையாள் பயந்து குழைந்து, கையிரண்டையும் மார்போடு சேர்த்துக் கட்டியபடி கேட்க... இவன் பதில் சொல்ல முடியாமல் தவித்துப் போவான்.

'ஆபீசுக்கு கிளம்பற வரைக்கும் அந்தண்டை இந்தண்டை நகரக் கூடாது. நான் காருலே ஏறி கார், இந்த பங்களா கேட்டைத் தாண்டற மட்டும்... என் கூடவே இருந்தாகணும் நீ.'

இப்படி அவன், கங்காவிடம் திட்டவட்டமாகக் கூறியிருக்கையில் திடீரென அவள் காணாமல் போனால்...

தண்ணீரிலிருந்து வெளியே எடுத்துப் போட்ட மீன் மாதிரி தவித்துப் போய்விடுவான் அவன்.

அவள் கோவிலிலிருந்து வீடு திரும்பியவுடன் காச் மூச்செனக் கத்துவான்... வார்த்தைகள் தொண்டையிலே சிக்க, திணறுவான்.

'யூ...யூ.. பிளடி கேர்ள்.'

'மன்னிச்சுக்குங்க... நீங்க எட்டரைக்கு கிளம்புவீங்க... படுக்கைய விட்டு ஏழு மணிக்கு எழுந்திருப்பீங்க. அந்தக் கணக்கை வச்சிட்டு நான் கோவிலுக்கு... மணி இப்ப ஆறு அம்பதுதானே ஆறது... அதுக்குள்ளே நீங்க எழுந்திருப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கலே...ஸாரி.'

'ஏழு மணிக்குத்தான் எழுந்திருக்கணும்னு ஏதாவது சட்டம் இருக்கா... எனக்கு ஆறரைக்கு முழிப்பு வந்துடுச்சு.'

'நான்தான் மாதையனை - ரூம் வாசல்லேயே நிறுத்தி வச்சிட்டுப் போயிருந்தேனே. அய்யா கூப்பிட்டா உடனே போய் - என்ன கேட்கறாரோ...'

'அது சரி. எழுந்தவுடனே எனக்கு பிரஷ்லே பேஸ்ட் வச்சு தர்றது யாரு...?'

'நான் ரெடியா எடுத்து வச்சிட்டுத்தானே போனேன்!'

'காபி..?'

'அதுவும் கலந்து ஃப்ளாஸ்க்குல போட்டு... மாதையனைக் கேளுங்க...'

'எல்லாத்தையும் அந்த ஆள்கிட்ட கேட்க முடியுமா? எனக்கு காபியோட பத்து பதினைஞ்சு முத்தம் வேணும். அவனைக் கேட்கட்டுமா..? இன்னும் கொஞ்ச நேரம் படுத்துட்டு. உன்னையும் சேர்த்து போர்வையாலே மூடிக்கணும்னு...'

'ஷ்... ஏன் இப்படிக் கத்தறீங்க? வெளிலதான் அவன் இருக்கான். என் மானம் போறது...'

'இது என் வீடு. நான் அப்படித்தான் பேசுவேன். எனக்கு வசதிக்குத்தான் ஆள், படை எல்லாம். இவனுக்காக நான் வாயை மூடிட்டு இருக்க முடியுமா... நல்ல கதையா இருக்கே... முதல்லே அவனை வெளியே போகச் சொல்லு. இந்த மாதிரி விவரம் தெரியாத ஆளுங்க எல்லாம் நமக்கு வேண்டாம்.'

கங்கா ஓடிப் போய் அறைக் கதவைத் தாழிட்டு விட்டு வருவாள்.

'ஐயோ... இப்ப என்ன நடந்து போச்சு? அதான் நான் வந்துட்டேனே? இன்னிக்கு உங்க பிறந்தநாள்...'

'அதனாலத்தான் கத்தறேன். பிறந்த நாளும் அதுவுமா காலையிலேயே மூட் அவுட்... ச்சே...'

'சும்மாயிருங்க... உங்களுக்கென்ன.. சுலபமாச் சொல்லிடுவீங்க. சாதாரண நாளுலேயே அய்யாவைக் கையாலே பிடிக்க முடியாது. இன்னிக்கு சாயந்திரம் எங்கே பார்ட்டியோ... எங்கே டின்னரோ... காலையில ஆரம்பிச்சு ராத்திரி ஒரு மணி வரைக்கும் நான் உங்ககூட வரணும்னு சொல்வீங்க. சாமி கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை செய்யறதுக்குத்தான் நேரமில்லாமப் போயிடும். அதனாலத்தான் பொழுது ஒரு பக்கம் விடியறச்சேயே எழுந்து ஓடினேன். அப்படியும் உங்ககிட்ட மாட்டிக்கிட்டேன்..'

'சரி... சரி.. இதை முன்னாலேயே சொன்னா என்னவாம்.'

அவன் குழைவதும், அவள் சிணுங்கிச் சிரிப்பதும்...

அது நேரம் வரையில் அறை வாசலில் கையைப் பிசைந்தபடி நின்ற மாதையன் - துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடுவதும்...

கங்கா, சற்றே புரண்டு தன் பக்கத்தில் படுத்துறங்கும் சுந்தரத்தையே ஒரு கணம் இமைக்காமல் பார்த்தாள்.

அவன் சொல்வது போல - சுடலைமுத்துவைத் தவிர வேறு யாருக்குமே அவனுடைய அந்தரங்கம் தெரியாது.



கங்காவுக்கு கூட ஓரளவுக்குத்தான் தெரியும்.

அவளுடைய இருபது வயதில், அவனிடத்தில் வேலைக்கு வந்து சேர்ந்தாள் அவள். இன்றைக்கு அவனில் சரி பாதி.

இந்தப் பதினாலு வருடங்களில் - அவர்கள் பிரிந்திருந்த நாட்கள் குறைச்சல். அப்படியே அவன் வெளியூர் போனாலும் - ஒரு நாளைக்கு பத்து தரம் போனில் பேசிவிடுவான்.

''அம்மா இல்லையின்னா - அய்யாவுக்கு காலும் ஓடாது. கையும் ஓடாது...'' இப்படி வேலையாட்கள் அத்தனை பேரும் சொல்வார்கள்.

ஆனால் ஒரே வீட்டில் பதினாலு வருடங்களாக புருஷன் - பெண்டாட்டியை விடவும் மேலாக - ஒற்றுமையாக - காதலாக - பாசமாக - உயிருக்குயிராக வாழ்ந்து வரும் இவர்கள் இருவரும் - இன்னும் திருமணமே செய்துகொள்ளவில்லை என்ற விஷயம் - சுடலையைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்?

இதோ - இப்போதுதான் வருகிற மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமை - திருச்செந்தூர் முருகன் சந்நிதியில் வைத்து - சுந்தரம் கங்காவின் கழுத்தில் முறைப்படி தாலி கட்டப் போகிறான்.

அந்த விஷயம் இன்னும் சுடலையிடம் கூடச் சொல்லவில்லை.

பதினாலு வருடங்கள் தவமிருந்து கிடைக்கப் போகிற அந்த ஒரு முழம் மஞ்சள் கயிறுக்காக - வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுக்க அவள் தயாராக இருக்கிறாள்.

அவனிடம் உயிரையே வைத்திருக்கும் வேலையாட்கள் ஒவ்வொரு வருடமும் தங்களது எசமானியம்மாவின் வயிற்றில் ஒரு பூ அரும்ப வேண்டும் என்பதற்காக, மாரியம்மனிடம் நேர்ந்து கொண்டு விழா எடுக்கிறார்கள்.

''அம்மா! நிச்சயமா உங்களுக்கு குழந்தை உண்டும்மா... நேத்து மாரியம்மன் கோயில் பூசாரி மேல அம்மன் வந்து சொல்லிச்சு. எனக்கு உடம்பே சிலுத்துப் போச்சு...''

இப்படி இவர்கள் சொல்லும் போதெல்லாம் - வெளியே புன்னகைத்தாலும் - மனதுக்குள் கங்கா விம்மி வெடிப்பது சுந்தரத்தையும், சுடலை முத்துவையும் தவிர வேறு யாருக்குத் தெரியும்?

ஒரே இலையில் சாப்பிட்டு, ஒரே கட்டிலில் படுத்து, ஒருவர் தோளில் மற்றவர் முகம் சாய்த்துத் தூங்கினாலும் - தாம்பத்திய உறவு அவர்களிடையே இல்லை என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

இதை வெளியே சொல்ல முடியுமா?

சொன்னாலும் மற்றவர்கள் நம்புவார்களா?

ஏன், கங்காவுக்காகப் பரிந்து சுடலைமுத்து சுந்தரத்திடம் எவ்வளவு பேசியிருக்கிறான்?

''அய்யா... சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே..?''

''உன்னையா...? நானா...? நல்ல வேடிக்கைதான். என்ன சொல்லப்போறே... நான் கோவிச்சுக்கும்படியா?''

''எப்பவோ நடந்து போன ஒண்ணை நினைச்சு, நீங்க கங்காம்மாவை இப்படி கன்னியாகுமரியம்மன் மாதிரி காக்க வைக்கிறது கொஞ்சம்கூட நல்லா இல்லீங்க. இது சாமிக்கே பொறுக்காது.''

''என்ன செய்யலாம் சொல்லு? ஒரு மனுஷனுக்கு ஒரு பிறவியில ஒருத்திதான் பொண்டாட்டின்னு நான் நினைக்கிறேன் சுடலை... இதைப் பத்தி கங்காகிட்டவும் நான் வெளிப்படையாகப் பேசிட்டேனே..!''

''அதுக்காக...? இது பாவமில்லீங்களா...? உங்களுக்கு கஷ்டம் வந்த காலத்துல எல்லாம் தோள் கொடுத்து, குடிச்சு குடிச்சு நீங்க உசிருக்குப் போராடிட்டிருந்த நேரத்துல எல்லாம் உங்க பக்கத்துல இருந்து தைரியம் கொடுத்து, உங்களோட அத்தனை சுமைகளையும் தன் முதுகுலே தாங்கிட்டு - பதினாலு வருஷமா உங்க கூட வாழறவங்களுக்கு நீங்க பதிலுக்கு என்ன தரப் போறீங்க?''

''அதான் என்னையே தந்திருக்கேனே சுடலை... வெளியுலகத்துக்கு நானும் அவளும் புருஷன் பொண்டாட்டிதானே...?''

''அந்தப் போலிப் பூச்சு மத்தவங்களுக்குத்தானுங்க. கங்கம்மாவுக்கு நீங்க கொடுக்கற பணமோ, சொத்தோ, நகைங்களோ பெரிசில்லீங்க. உங்க கையாலே ஒரு மஞ்சள் கயிறு... அதுக்கும் மேல கடவுளோட கருணை இருந்தா ஒரு குழந்தை.... அவ்வளவுதாங்க. இல்லையின்னா... இத்தனைக் காலம் அவங்க, தன்னோட மனசு, உடம்பு எல்லாத்தையும் உங்க காலடியில் அர்ப்பணிச்சதுக்கு என்ன பலன்?''

சுந்தரம் சிரிப்பான். சுடலையின் தோளில் தட்டிக் கொடுப்பான்.

''சுடலை:.. உனக்கு எத்தனை பொண்டாட்டி?''

''மூணுங்க... அந்தக் கதை இப்ப என்னத்துக்கு?''

''இல்லே... நான் பணக்காரன்தான். நினைச்சா எத்தனை பேரை வேணுமானாலும் சின்ன வீடா செட்டப் செய்ய முடியும். ஆனா, என் மனசு அதுக்கு இடம் கொடுக்கலே. உனக்கு ஞாபகமிருக்கா ராணிய?''

சுடலை தலை குனிவான். மனசுக்குள் எரிச்சல் மண்டும். 'பெண்ணா அவள்?' என்று ஆத்திரம் பொங்கும், ஆனாலும் வாய் பேசமாட்டான்.

''ராணிய... எங்கேயோ சந்திச்சு... சில காலம்தான் பழகினேன்னாலும் அவ வயித்துல ஒரு குழந்தையக் கொடுத்து... யோசிச்சு பார் சுடலை... என்கிட்ட தன்னை இழந்து, என் மூலமா ஒரு குழந்தைக்கும் தாயான ராணி... இன்னிக்கு அவ எங்கே இருக்காளோ... அவ குழந்தை... பிறந்துச்சா... உசிரோட இருக்கா எதுவுமே தெரியலே...''

''ராணியம்மாவைக் கல்யாணம் செஞ்சுக்க நீங்க தயாராத்தானே இருந்தீங்க? அந்தம்மாவுக்குத்தான் கல்யாணம், சம்பிரதாயம் இதுல எல்லாம் நம்பிக்கையே இல்லே. வயத்துல வளர்ந்த ரெண்டு மாசக் கருவைக்கூட அழிச்சுக்கணும்னு இல்லே குதிச்சாங்க. அதுக்கு நீங்க ஒத்துக்காததாலேதானே எங்கேயோ சொல்லாமக் கொள்ளாம ஓடிப் போனாங்க...''

''ஆமா.. என்னால என் குழந்தைய அழிக்க முடியலே சுடலை... ஒரு தாய்



- தன் குழந்தைய அழிச்சுக்கணும்னு சொன்னதையும் என்னாலே தாங்க முடியலே... மிருகமாயிட்டேன்... அவளை அடிச்சிட்டேன்... அவ பயந்து ஓடிட்டா...''

''என்னங்க பயம்? உலகத்துல ஆம்பிளைங்கதான் பொம்பிளையக் காதலிச்சு வயித்துலக் குழந்தையக் கொடுத்திட்டு ஓடி ஒளிஞ்சுப்பாங்க. பொம்பிளைங்க திக்கதியா - நடுத்தெருவுல நின்னு புலம்புவாங்க. இல்லே கோர்ட்டுல கேஸ் போடுவாங்க... பார்த்திருக்கேன்... கேட்டிருக்கேன். இங்கே எல்லாம் தலைகீழா இருக்கு. தாலி கட்டிட்டு, பிள்ளையப் பெத்துட்டு, குடித்தனம் செய்ய மாட்டேன்னு அவங்கதான் ஓடினாங்க... நீங்க அவங்களையே நினைச்சிட்டு... அட, வேற ஒரு பொண்ணையே உங்க வாழ்க்கையிலே சேர்க்கலையின்னாலும் சரி... கங்காம்மாவையும் சேர்த்துட்டு...''

''நானா சேர்த்தேன்? அதுவா வந்து சேர்ந்துடுச்சு. இப்ப பிரிக்க முடியாத பந்தமாயிடுச்சு.''

''பந்தமாயிருச்சில்லே? இனிமே பழசை உதறுங்க. புதுசா வாழ ஆரம்பியுங்க. கழுத்துல தாலி கட்டி, அடுத்த வருஷத்துக்குள்ள ஒரு பிள்ளையப் பெத்துக்குங்க. இப்பவே எனக்கு சந்தேகம்தான்... பொறக்கப் போற பிள்ளை உங்களை தாத்தான்னு கூப்பிடப் போறதோன்னு...''

சுந்தரம், இந்த வார்த்தைகளுக்கு மட்டும் சிரிக்கமாட்டான்.

மனசுக்குள் சுடலையாய் ராணி தோன்றுவாள். அவளது ஆடம்பர உடைகளும், அட்டகாசச் சிரிப்பும் வட்டமிடும்.

சுந்தரத்தின் இருபத்திரண்டாம் வயதில் ராணியின் அறிமுகம். கல்லூரி சிநேகம். அப்பொழுதே அவள் அழகில் கல்லூரியே கிறங்கும். அவளோ பாதி நாள் கல்லூரிக்கு வரமாட்டாள். கேட்டால், '**விளம்பரங்களுக்கு போஸ் கொடுக்கப் போயிவிட்டேன்**' என்பாள்.

உண்மையிலேயே அவளுக்கு விளம்பர உலகில் பலத்த வரவேற்பு இருந்தது. மாடலிங் செய்வதால் பணம் நிறைய வருகிறது என்பதை விடவும் - தனது அழகு மற்றவர்களால் பாராட்டப்படுகிறது என்பதில்தான் அதிக அக்கறை அவளுக்கு.

அவளைப் பெற்றவனோ - மகளை சினிமாவில் சேர்த்துவிட வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தான்.

இத்தனைக்கும் நடுவில் சுந்தரத்துடன் இவளுக்குப் பழக்கம் ஏற்பட்டது - சுந்தரத்தின் போதாத காலம்தான்.

அவன், இவளுக்காகவே பிறவி எடுத்தது போல அந்த நாட்களில் அலைந்தான். அவளுக்கும் பம்பாய், கல்கத்தா என்று மாடலிங்குக்காகப் போய் வருவதற்கு ஒரு துணை தேவைப்பட்டது. வேடிக்கை பாதியும் - நிஜம் பாதியுமாய் அவள், தன் தாயிடமே சுந்தரத்தின் எதிரில் சொல்லியிருக்கிறாள்.

''அம்மா... சினிமா சான்ஸ் கிடைக்கறதான்னு இன்னும் கொஞ்ச

நான்தான் பார்ப்பேன். ஒண்ணும் கிடைக்கலையின்னா பேசாம சுந்தரத்தையே கல்யாணம் செஞ்சுக்குவேன். சாது பிராணி. நிறைய பணம் இருக்கு. என்ன, கல்யாணமாகி ஒரு வருஷத்துக்குள்ளேயே பசுமாடு மாதிரி ஆயிடுவேன்."

சுந்தரம், மானசீகமாய் கடவுளை வேண்டினான்.

'கடவுளே... இவளுக்கு சினிமா சான்ஸ்ஸே கிடைக்கக் கூடாது.'

சுந்தரத்தின் அப்பா - அவனது காதலுக்கு தடையாய் நிற்கவில்லை. ஆனாலும் கவலைப்பட்டார்.

"என்னடா... பொண்ணைப் பார்த்தா - குடும்பத்துக்கு ஏத்தவளாத் தெரியலையே?"

"நோ டாட்... நீங்க நினைக்கறது தப்பு. அழகும், வயசும், வளர்ந்த சூழ்நிலையும் அப்படி. கல்யாணமாயிருச்சுன்னா... நீங்களே ஆச்சர்யப்படுவீங்க..."

அவன் தீர்மானமாய் அடித்துக் கூறினான்.

அவளோ நாகரீகத்தின் உச்ச கட்டத்தில் இருந்தாள். பம்பாய் போன்ற நகரங்களுக்கு சுந்தரத்தின் துணையில் போனாலும் அங்கே விளம்பர நிறுவனங்களில் உள்ள பெரிய புள்ளியுடன் ஊர் சுற்றக் கிளம்பிவிடுவாள். இவன் போய், தேடிப் பிடித்து, இழுத்து வருவான்.

அப்போதுதான் ஒருமுறை...

இளமையின் வேகத்திலும், எப்படியும் திருமணம்தான் செய்துகொள்ளப் போகிறோமே என்ற அசட்டுத் துணிச்சலிலும் - சம்பிரதாயமாக நடக்க வேண்டிய முதலிரவை அவசரமாய் ஹோட்டலிலேயே முடித்துக் கொண்டார்கள்.

இதுபற்றி ராணி அதிகம் கவலைப்படவில்லை. சுந்தரம்தான் இன்னும் இவளுடன் தன்னை இறுக்கிக் கொண்டான்.

"ராணி, என்னைப் பொறுத்தவரைக்கும் இதை ரொம்பவும் பவித்ரமான உறவா நினைக்கிறேன். அதனாலே... கல்யாணத்தை சீக்கிரமா முடிச்சுக்கறது நல்லதுன்னு தோணுது."

"ஏன்... ஏன் அப்படி நினைக்கறே? நான் உன்னைவிட்டு ஓடிப்போயிடுவேன்னு பயமா?"

"சேச்சே... அப்படியில்லேம்மா. சில பேருக்கு முதல் தடவையிலேயே கரு உண்டாயிடறதும் உண்டு. மேலும் நாம, குழந்தை வேண்டாம்கறதுக்காக எந்தவித தற்காப்பும் எடுத்துக்கலே... அதனாலே... அப்படி ஏதாவது ஆயிடுச்சுன்னா...."

"ஆயிடுச்சுன்னா...?"

அவள் தலையைச் சாய்த்து அவனை கோணல் பார்வை பார்த்தாள்.

"இந்தக் காலத்துல இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா? வயசிருக்கு... எப்ப வேணுமானாலும் பெத்துக்கலாம். இப்ப என்ன அவசரம்? ஐ டோண்ட் திங்க் - எனக்கு அந்த மாதிரி எல்லாம் ஆகிடாது."

சொன்னாளே தவிர -



இந்த சம்பவம் நடந்த அறுபதாவது நாள்... லேசாகத் தலைசுற்றுவதாகச் சொல்லி, அவள் - மவுண்ட் ரோட்டிலுள்ள ஒரு கடை வாசலில் அப்படியே உட்கார்ந்ததும்... அன்று மாலையே சுந்தரம் அவளை டாக்டரிடம் அழைத்துப் போனதும், டாக்டர் ராணி கருவுற்றிருப்பதாகச் சொன்னதும்...

அதிர்ந்து போனாள் அவள்... அந்தக் கணமே கருவை அழித்துவிடும்படி அழுது, ஆர்ப்பாட்டம் செய்தாள். அவனது சட்டையை நகத்தால் பிறாண்டி, வாயில் வந்தபடி ஏசினாள். இதனால் தனது அழகே அழிந்து போய்விடும் என்று புலம்பினாள். தனக்கு விளம்பரத்துறையில் நல்ல வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கும்போது தன் வளர்ச்சியைத் தடுப்பதற்காகவே சுந்தரம் செய்த சூழ்ச்சி இது என்றாள்.

"எனக்கு இஷ்டமில்லாத கருவை அழிச்சுக்க எனக்குப் பூரண சுதந்திரம் இருக்கு... நடுவில நீ யார்?"

இப்படி அவனோடு சண்டை போட்டவள், ஒருநாள் தன் தாயுடன், சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிப் போய்விட்டாள்.

முதல் நாள் மாலை வரையில் தெரியாது. தெரிந்த போதோ... உயிரே பறந்தாற்போல தவித்துப் போய்விட்டான் சுந்தரம்.

அன்று குடிக்கத் தொடங்கியவன்தான்... சுமார் நாலு வருடங்கள் உடல் நிலை மோசமாகி படுக்கையில் விழும் வரையில்...

யாராலும் அடக்க முடியவில்லை.. சுடலைமுத்துதான் எப்போதும் கூடவே...

மகனின் நிலை கண்டு மனம் நொந்து ஒருவர் பின் ஒருவராய் பெற்றோர் மடிய...

அந்த நேரத்தில் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு - வேலை தேடி வந்தவள்தான் கங்கா...

"அய்யா..."

"என்ன சுடலை?"

"பெரிய எசமான் இருக்கறப்ப - தனக்கு ஒரு செகரட்டரி வேணும்னு பேப்பர்லே விளம்பரம் செஞ்சிருந்தாராம். அதுக்கு வந்தவங்கள்லே - கங்காங்கற பொண்ணை தேர்ந்தெடுத்து இத்தனாம் தேதியில இருந்து வேலையில வந்து சேரச் சொல்லி, லெட்டரும் அனுப்பியிருக்காரு. இப்ப அந்தப் பொண்ணு வந்திருக்குங்க."

"திருப்பி அனுப்பிடு. சாமியே போயிட்டார். இனிமேல் இவ வந்து என்ன பிரயோசனம்?"

இவனது பதில் அவள் காதிலும் விழுந்திருக்க வேண்டும். ஏமாற்றத்துடன் திரும்ப நினைத்தவளை, சுடலைதான் தடுத்து நிறுத்தினான்.

"கொஞ்சம் வெளில இரும்மா. இதோ வந்திட்டேன்."

அவள், பங்களாவில் - வெராந்தாவில் - போடப்பட்டிருந்த நாற்காலியில் அவஸ்தையுடன் அமர...

உள்ளே சுடலைமுத்து - சுந்தரத்துக்கு வேப்பிலை அடிக்காத குறை.

''நீங்க செய்யறது கொஞ்சம்கூட நல்லா இல்லே அய்யா... உங்க ஒருத்தரோட துக்கத்துக்காக - ஆயிரக்கணக்கான தொழிலாளிங்க வேலை செய்யற தொழிற்சாலைங்களை எல்லாம் இழுத்து மூடப் போறீங்களா..? அப்படி என்னங்க... அந்த ராணியம்மா பொல்லாத அழகி..? அழகு இருந்தா அது அவங்களோட... இந்நேரம் அவங்க 'வயித்தைக் கழுவிட்டு' - எங்கேயாவது கேமரா முன்னாலே அரைகுறையா நின்னுட்டிருப்பாங்க...''

''சுடலை...''

''அய்யா மன்னிச்சுடுங்க. அந்த ஒரு சின்னத்தோல்வியாலே ஆரோக்யத்தை இழந்தீங்க. பெத்தவங்களை இழந்தீங்க. இப்ப நமக்கு வெளியுலகத்துல கிடைச்சிட்டிருக்கற மரியாதையையும் கம்பீரத்தையும் இழந்துடக் கூடாதேங்கற பதட்டத்துல...

இதோ இப்ப வந்திட்டுப் போன பொண்ணைப் பத்தி, பெரிய அய்யாவே என்கிட்ட சொல்லியிருக்காருங்க. 'நல்ல பொண்ணுடா சுடலை. வீட்டுலே பெரியம்மாவும் போயிட்ட பிறகு என்னையும், என் மகனையும் கவனிக்க நல்ல மனசுள்ள ஒரு பொண்ணு தேவையின்னு படுது... இந்தப் பொண்ணு, என் நம்பிக்கையை வீணாக்க மாட்டான்னு தோணுது'ன்னாக... எனக்கென்னவோ நம்ம வீட்டுல இந்தப் பொண்ணு இருக்கட்டும்னு தோணுது... கொஞ்ச நாள் பொறுத்திருந்து பார்ப்போம்.''

''உம்... உன்னிஷ்டம்...''

இன்றைக்கும் தாய் தகப்பனில்லாத கங்காவுக்கு, சுடலைதான் எல்லாம். சுந்தரம் கூட வேடிக்கையாகச் சொல்லுவான்.

''சுடலை... எனக்கென்னவோ இந்த கங்கா உன் சொந்தப் பொண்ணா இருக்குமோன்னு சந்தேகமா இருக்கு. என் சொத்தை எல்லாம் அபகரிக்க, நீதான் இப்படி திட்டம் போட்டு, உன் பொண்ணை இங்கே கொண்டு வந்துவிட்டு...''

அவன் இப்படிப் பேசி, தன் சுபாவப்படி கண்களைச் சிமிட்டிச் சிரிப்பான். கங்கா தலையில் அடித்துக்கொள்வாள்.

''போதுமே... மனசுக்குள்ள பெரிய சி.ஐ.டி.யின்னு நினைப்பாக்கும்.''

சுடலையுடன் இத்தனை ஒன்றிய கங்கா - இன்னமும் இந்த சந்தோஷ சமாச்சரத்தை அவனிடம் சொல்லாமல் இருப்பதற்கு காரணம்...

சுந்தரம்தான்.

''கங்கா, உன் விருப்பப்படி - உன் கழுத்துல.. நூறு பவுன் நகை போட்டாலும் அந்த ஒரு மஞ்சள் கயிறுதான் பொண்ணுக்கு மரியாதையைக் கொடுக்கும்கற உன் வார்த்தைப்படி - உன் கழுத்துல... அந்த மஞ்சள் கயிறைக் கட்டிடறதுங்கற தீர்மானத்துக்கு வந்துட்டேன்.''

அவள் உணர்ச்சி மேலீட்டில் பேச்சு வராமல் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

''இதை இப்ப நீ சுடலைமுத்துகிட்ட சொல்லாதே. அவன் வீட்டுக் கல்யாணத்தை முதல்லே முடிக்கட்டும். அப்புறம் சொல்லலாம். இல்லையின்னா அங்கே இருக்கமாட்டான். என்ன..''



அவள் தலை குனிந்தாள்.

சுந்தரம் அவளது முகவாயை மெள்ள உயர்த்தி, அவளது நீர் தளும்பும் கண்களுக்குள் எதையோ தேடுவதுபோல ஊடுருவினான்.

''இத்தனை நாள் உன்னைக் காக்க வச்சதுக்கு என்னை மன்னிச்சிடு கங்கா.''

''*சீச்சீ*... என்னது நீங்க என் கிட்டப்போய் மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு.''

**சு**டலைமுத்து வீட்டுக் கல்யாணத்துக்கு - சுந்தரம் வந்தது மட்டுமில்லை... கல்யாணத்தையே அவன்தான் - முன்நின்று நடத்தி வைத்தான்.

பகல் சாப்பாட்டுக்குப் பிறகு - சுடலையிடம் விஷயத்தைக் சுந்தரமே சொன்னான். கங்கா, இதைக் கவனித்தும் கவனியாதவள்போல - சுடலையின் குடும்பத்துப் பெண்களோடு பேசிக் கொண்டிருந்தாள்.

''சுடலை... கடைசியில உன் ஆசை நிறைவேறப்போறது... அடுத்த வாரம் திருச்செந்தூர் முருகன் சந்நிதியில... நீதான் எங்க ரெண்டு பேருக்கும் இருக்கற ஒரே உறவு...''

''அய்யா...''

சுடலை, சுந்தரத்தின் கரத்தைப் பிடித்துக் கொண்டு அழுதே விட்டான்.

''நீ, உன் பொண்ணை புருஷன் வீட்டுக்கு அனுப்பு... நாம செய்ய வேண்டிய வேலை இது...''

அவன், இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சுடலையின் சமபந்தி வீட்டு மனிதர்களிடையேயிருந்து ஒருவன் அவனெதிரில் வந்து நின்றான்...

''நீ...நீ...நீங்க... சுந்தரம்னு சொன்னாங்க... பிரசிடென்சியிலதானே படிச்சீங்க...?''

''அட, ஆமா... நீங்க யாரு?''

''என்னைத் தெரியலையா சுந்தரம்...? நான் கேசவலு... கேச்சுப்பா... உன்னோட செட்தானே...!''

''அட கேச்சு... நீ எங்கேடா இங்கே...''

''மாப்பிள்ளைப் பையனோட அம்மா, என் கூடப் பொறந்த அக்கா... நானும் அப்பவேயிருந்து பார்த்துட்டே இருந்தேன். நீதானான்னு சந்தேகமா இருந்தது..., எல்லாரும் 'அய்யா'ன்னு மரியாதை கொடுத்தாங்களா... எப்படிடா போய் பேசறதுன்னு தயக்கமாயிடுச்சு...''

''என்கிட்ட என்னடா தயக்கம். டேய் எப்படிடா இருக்கே? அந்த நாளுலே நீதானே ரோட் ஸைடு ரோமியோ...''

கேச்சு என்ற கேசவலு வெட்கத்துடன் புன்னகைத்தான்.

அன்றைக்கு கதாநாயகனாக இருந்தவன் இன்றைக்கு குடுக்கை தட்டிய கண்களும், சரியும் தொப்பையும், எண்ணெய் வழியும் முகமுமாய் இருந்தான்.

''ஒவ்வொருத்தரோட வாழ்க்கையும், அவங்க நினைச்சுப் பார்க்காத மாதிரியெல்லாம் மாறிடறது சுந்தரம் - அன்னிக்கு நான் பயமே அறியாத இளங்காளையா இருந்தேன்... ஃப்ரெண்ட்ஸ்ஸோட சேர்ந்து செலவழிக்க அஞ்ச மாட்டேன். ஆனா... திடீர்னு எங்க அப்பா தன் தொழில்லே நஷ்டமடைஞ்சு - ஏகப்பட்ட கடனை வச்சிட்டு செத்துட்டாரு. பி.ஏ.படிச்சவன் நிஜமாவே பெங்களூர்லே பெஞ்சு துடைச்சிட்டு இருந்தேன். ஏதோ இப்பத்தான் ரெண்டு மூணு வருஷமா பெங்களூர்லே ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்லே மானேஜரா இருக்கேன்... பெண்டாட்டி, குழந்தைங்க... அதை ஏன் கேட்கறே.. பெரிய சம்சாரியாயிட்டேன்...''

சொல்லிக் கொண்டே வந்தவன் - திடீரென நினைத்துக் கொண்டாற்போலக் கூறினான்.

''ஏய்... ராணிய ஞாபகமிருக்கா.. இல்லே மறந்துட்டியா...?''

சுந்தரம் மட்டுமில்லை, சுடலையும் கங்காவும்கூட திடுக்கிட்டு நிமிர்ந்தனர்...

சுந்தரத்தின் முகத்தில் சட்டென ஓடிய பிரகாசத்தை கங்கா கவனிக்கத் தவறவில்லை.

''போன வருஷம் ஒரு 'பார்'லே அவளைப் பார்த்தேன்... உடம்பு ஊதி, ரொம்ப மோசமாயிட்டா.. பேசறப்பவே மூச்சு வாங்கித்து.... கூடவே ஒரு பொண்ணு... அவளை மாதிரியே... உன்னை எல்லாம்கூட விசாரிச்சா.. அந்தப் பொண்ணு, அம்மாவோட பேச்சுல ஒட்டாம இருந்துச்சு...''

சுந்தரம் விசையைத்தட்டினாற்போல் எழுந்தான்...

''கேச்சு... இன்னிக்கே நீ என்னோட பெங்களூருக்கு கிளம்பு...''

---

## 2

---

''கங்கா... இவதான் பப்லு...''

சுந்தரத்தின் குரல் கேட்டு கங்கா நிமிர்ந்து பார்த்தாள்.

பதினெட்டு வயதில் ஓர் அழகோவியம் தன்னைப் பற்றிய சிந்தனையே கொஞ்சம் கூட இல்லாதது போல் - பேண்ட்டும், டீஷர்ட்டும் அணிந்து விரைப்பாய் நின்று கொண்டிருந்தது.

சுடலைமுத்து, தன் உணர்ச்சிகளை மிகச்சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு காரிலிருந்து பெட்டி படுக்கைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

''நல்லவேளை கங்கா... நான் சரியான சமயத்துல போய் சேர்ந்தேன். இல்லையின்னா - இவ பாம்பேக்கு பறந்திருப்பா...''

கங்காவின் கண்கள் ராணியைத் தேட - சுந்தரம் அதைப் புரிந்து கொண்டு, அளவிட முடியாத சோகத்துடன் சொன்னான்.

''ராணி செத்துட்டா கங்கா... அவளை நான் பார்க்கவே முடியாமப் போயிடுத்து... அவ போய் ஒரு வருஷமாகுதாம். கேச்சு பார்த்ததாச்



சொன்னானே. அதுக்கு அப்புறம் ஒரு மாசம் கூட உயிரோட இல்லையாம் அவ. அம்மா போனதுக்கு அப்புறம் பாவம் பப்லு செலவுக்குப் பணமில்லாம ஒரு ஃப்ரெண்டு வீட்டுலத் தங்கிட்டு...''

அவன் அதற்கு மேல் எப்படிச் சொல்வது என்றே புரியாமல் தயங்க - பப்லு பட்டென வெடித்தாள்.

''ஏன் தயங்கறீங்க... ஒரு ஹோட்டல்லே வேலை செஞ்சிட்டிருந்தேன்... வேலையின்னா...காபரே ஆடறது... கம்பெனி கொடுக்கறது. ஏதோ நான் பாட்டுக்கு பாம்பே போய், அப்படியே செட்டிலாயிடலாம்னுதான் இருந்தேன். திடீர்னு நீங்க வந்து சினிமாவுல வர்ற மாதிரி, 'மகளே நான்தான் உன் அப்பா'ன்னு சொன்னீங்க... அம்மா இது பத்தி என் கிட்ட எதுவுமே சொன்னதில்லே... ஆனாலும் நீங்க விடாம நச்சரிச்சத்துனால இங்கே வந்திருக்கேன்... என் கண்டிஷன் ஞாபகமிருக்கா?''

''என்...என்ன கண்டிஷன்?''

''என்ன மேன்.. அதுக்குள்ளே மறந்துட்டே?''

''நான் இங்கே ஒரு மாசம்தான் இருப்பேன்.. அப்புறம் பிடிச்சா இருப்பேன்... இல்லாட்டி என்னை சுதந்திரமா விட்டுடணும்....''

''ஓ... அதுவா... ஓ...கே...ஓ.கே... உன்னை இங்கே யாருமே வற்புறுத்த மாட்டாங்க... பப்லு... நீ அப்படியே உங்க அம்மா சாயல்தான்னாலும் அந்த நெத்தி மூக்கு எல்லாம் நான்தான்... நேத்து நான் சுடலை கிட்ட கூட இதப்பத்தி பேசிட்டிருந்தேன்.''

''ஸ்டாப் ஆல் திஸ் நான்சென்ஸ்... நீயா எதையாவது கற்பனை செஞ்சிட்டு எனக்கு லேபிள் குத்தாதே... அது சரி.. இது யாரு...''

''இது...இது...''

சுந்தரம் இழுத்தான். கங்காவோ கண்ணீர் மல்க - புடவைத் தலைப்பை விரலால் முறுக்கியபடி ஈனசுரத்தில் சொன்னாள்.

''என் பேரு கங்கா. நான், இவரோடதான் பதினாறு வருஷமா இருக்கேன்.''

பப்லு லிப்ஸ்டிக் தடவிய இதழ்களை அழகாய் குவித்து, புருவத்தை உயர்த்தினாள்.

''இருக்கேன்னா... நீ இந்த ஆளோட பொண்டாட்டி இல்லையா..?''

சுடலைக்குப் பொறுக்கவில்லை. அவசரமாய் அறைக் கதவைத் தாழிட்டு விட்டு வந்து - பப்லுவின் எதிரில் நின்று இரு கைகளையும் குவித்தான்.

''அம்மா... நீ யாராக வேணுமானாலும் இரு தாயே... ஆனா இந்த வீட்டுக்குன்னு சில கௌரவமெல்லாம் உண்டு. ரகசியமெல்லாம் உண்டு... அதை...''

கங்காவுக்குள் சடாரென எரிச்சல் பொங்கியது. ஆனாலும் அடக்கிக் கொண்டு அமைதியாகவே பதிலளித்தாள்.

''ஏன் சுத்தி வளைக்கறே சுடலை...இதோ, நானே சொல்றேன். பப்லு... நான் இந்த வீட்டுக்கு வேலைக்கு வந்தவதாம்மா... உங்க அப்பாவோட குணத்துலேயும் அவர் சுபாவத்துலேயும் ஈர்க்கப்பட்டு, இந்த வீட்டுலேயே

அவருக்குத் தாலிகாட்டாத மனைவியா வாழ்ந்துட்டு வர்றேன்...''

பப்லு, உதட்டைக் குவித்து மெலிதாய் விசலடித்தாள்.

''ஏன் அநாவசியமா நீயும் ஊரைச் சுத்தி, மூக்கைத் தொடறே... நீ அவருக்கு வப்பாட்டி அவ்வளவுதானே...''

சுந்தரத்தின் குரல் முதலில் உயர்ந்தாலும் - உடனேயே தழைந்தது.

''நீ நினைக்கிறமாதிரி இல்லேடா... கங்காவுக்கு என்னைத் தவிர வேற உலகமே கிடையாது... உண்மையிலே நாங்க ரெண்டு பேரும் - கோவில்லேவச்சுக் கல்யாணம் பண்ணிக்கிறதா - ரொம்ப நாள் யோசிச்சதுக்கு அப்புறம் பத்து நாளைக்கு முன்னாலேதான் தீர்மானிச்சோம்.''

''ஓ...''

பப்லு அலட்சியமாய் தோள்பட்டையைக் குலுக்கிக் கொண்டாள்.

''அதெல்லாம் உங்க சமாச்சாரம்.' யூ நோ.. எங்கம்மாவையும் பொண்டாட்டியா மதிச்சு - இத்தனை வருஷங்களுக்கு அப்புறம் தேடிட்டு வந்தது நீ மட்டும்தான்னு நினைக்கிறேன். அவளை அடையணும்னு நினைச்சவங்க யாருமே நிரந்தரமா அவளை மனைவியாக்கிக்க விரும்பினதில்லே. அவளும் நானும் ஸைக் பண்ணினதில்லே... ஃபிரீ பேர்ட்... நானும் அப்படித்தான்... இந்தக் கல்யாணம் கத்திரிக்கா இதுல எல்லாம் எனக்கு நம்பிக்கையே இல்லே. ஒரே மனுஷனோட சேர்ந்தாப்பல ஆறு மாசம் வாழறதே பத்தும். இதுல வருஷக்கணக்குல ஒரே வீட்டுல... ஹாரிபிள்பா... நினைச்சாலே உடம்பெல்லாம் நடுங்குது...

அவள் ஒரு முறை சிலிர்த்துக் கொண்டு - கங்காவின் கையைப் பிடித்துக் குலுக்கினாள்.

''எனி ஹவ்... அதெல்லாம் உங்களோட சமாச்சாரம். எனக்கென்ன... ஆமா... நான் உன்னை கங்கான்னே கூப்பிடவா...?''

''கூப்பிடுங்க.''

''வாட் அபவுட் யூ... இந்த அப்பா, டாடி... இதெல்லாம் எனக்கு சரிப்பட்டு வராது.. நான் உன்னை - சுந்தர்...ன்னு கூப்பிடறேன்... தட் இஸ் நைஸ்... சுந்தர்... என் ரூம் எங்கே இருக்கு?''

''மாடியில... வா, நான் காட்டறேன்...''

சுந்தரம் கண்களைத் துடைத்துக் கொண்டு ஓட, சுடலை முத்து தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

''அம்மா... நம்ம அய்யாவுக்கு இதெல்லாம் தேவையா... பெங்களூருக்குப் போய், விலாசம் சரியாத் தெரியாம அலைஞ்சு, கடைசியில எங்கேயோ ஒரு எலிக் குகையிலேயிருந்து பிடிச்சிட்டு வந்தோம்மா... 'உங்க கூடப் புறப்பட்டு வரணும்னா இருபத்தஞ்சாயிரம் ரூபா எடுத்து வச்சாத்தான் வருவேன்'னு சொல்லிடுச்சு. 'நீ வாம்மா...என் கோடிக்கணக்கான சொத்தே உனக்குத்தான்'னு அய்யா - பொம்பிளை மாதிரி குமுறி அழறாரு... கேட்கலையே.. கடைசியில அய்யா - இருபத்தஞ்சாயிரத்துக்கு அம்பதாயிரமாக் கொடுத்தாரு. வாங்கி... அங்கே யார் யாருக்கோ எல்லாம் செட்டில் பண்ண வேண்டியிருந்தது போல. எல்லாத்தையும் முடிச்சிட்டு...''



கங்கா பேசாமல் உட்கார்ந்திருக்கிறாள். முந்தைய நிமிடம் வரையில் அந்த வீடு அமைதிப் பூங்காவாக இருந்தது. இனிமேல் எப்பொழுது எரிமலை வெடித்துச் சிதறுமோ தெரியாத நிலைமை...

'இந்தப் பெண் என்ன செய்யப் போகிறாள்?'

'சுந்தரத்தைச் சேர்ந்தவர்களும், வீட்டிலுள்ள வேலையாட்களும் - இவளை எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்.'

'அது சரி...

இத்தனைக்குப் பிறகு நமக்கு இந்த வீட்டிலோ - இவரது மனசிலோ இடமிருக்கிறதா என்ன...'

'இதுநாள் வரையில் தம்பதியராய் வாழ்ந்து விட்டு இனிமேல் பிரிந்து போனால் ஊர் உலகம் என்ன சொல்லும்...'

ஒரே சமயத்தில் ஏகப்பட்ட கேள்விகள் எழ.... அப்படியே தவித்துப் போய் உட்கார்ந்தாள் அவள்...

காபி கோப்பையுடன் மாடிக்குப் போன சுடலை... தாங்கமுடியாத வயிற்றெரிச்சலுடன் கீழே இறங்கி வந்து சொன்னான்.

''அதென்னம்மா அந்தப் பொண்ணு - குப் குப்புன்னு சிகரெட் பிடிச்சிட்டு உட்கார்ந்திருக்கு... அதுவும் நம்ம அய்யா எதிரிலேயே?''

---

## 3

---

''ஹேய் நோ... ''

பப்லு, ஆவேசமாய் கையாட்டினாள். சுந்தரம் பதட்டத்துடன் நின்றிருந்தான். கங்கா, பப்லுவின் தோளைப் பற்றி இதமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். ''பப்லு... உன் அப்பா ஒரு கோடீஸ்வரர். தன் சொத்தை எல்லாம் உனக்கே எழுதி வைக்கப்போகிறார். அப்படி இருக்கறப்ப நீ, அளவுக்கு அதிகமாகக் குடிச்சிட்டு ஹோட்டல்லே கொட்டமடிச்சா... அது அத்தனை நல்லாயில்லேம்மா...''

பப்லு, இடுப்பில் கை வைத்தபடி கங்காவை முறைத்தாள்.

''அவர் கிட்ட பணமிருக்குன்னா... அதுக்காக நான் சந்நியாசி வேஷம் போடணும்னு சொல்றியா..? அதெல்லாம் முடியாது. உனக்கு வேணுமானா பதினாலு வருஷ பந்தம்... இந்தாளை விட்டுப் போனா செல்லாக் காசா ஆயிடுவே.... எனக்கென்ன.. என்னோட பழக்க வழக்கம்... ஃபிரண்ட்ஸ்... எல்லாத்தையும் மூட்டைகட்டி வச்சிட்டு கரன்சியை தட்டுல வச்சிக்கிட்டு திங்க சொல்றியா...? அதுக்கு வேற ஆளைப்பாரு.''

சுந்தரம், பப்லுவின் கரத்தை இறுகப் பிடித்துக்கொண்டான்.

''பப்லு... நீ எப்படி வேண்டுமானாலும் இரு. ஆனா, வெளியில அந்த மாதிரி எல்லாம் நடந்துக்க வேண்டாமே. எனக்கு உன்னோட கஷ்டம் புரியறது. இத்தனைநாளா வாழ்ந்துட்டிருந்த வாழ்க்கையை 'திடுதிப்'புனு

உன்னால உதற முடியாது. இப்ப உனக்கு என்ன வேணும்? சொல்லு... உனக்கு இங்கேயே வரவழைக்கிறேன்...''

''ஐ வாண்ட் விஸ்கி.. பிளாக் லேபிள்... டிரிபிள் ஃபைவ் சிகரெட்... எனக்கு தினமும் இதெல்லாம் இல்லாம சரிப்படாது..''

''ஓ.கே... அவ்வளவுதானே...நான் வரவழைக்கிறேன் பப்லு... இன்னிக்கு இல்லையின்னாலும் நாளைக்கு நீ பெரிய 'இண்டஸ்டிரியலிஸ்ட்' ஆகப்போறே... அப்படி, உனக்குன்னு ஒரு அந்தஸ்து வேணும் பப்லு... 'அவளா... அவ நேத்து வரைக்கும் ஹோட்டல்லே குடிச்சிட்டு கலாட்டா பண்ணிட்டு இருந்தவதான்'னு நாலு பேர் நாளைக்கு சொல்லக்கூடாது பாரு... அதனாலே...''

''அந்தக் கதையெல்லாம் எனக்கு வேணாம். நான் ஒரு மாசத்துல போயிடுவேன்...''

''சரி. போ... இருக்கற வரைக்கும் உனக்கு வேண்டியதை எல்லாம் வீட்டுக்கே வரவழைக்கிறேன்...''

சுந்தரம் அவள் கூறிய எல்லா நிபந்தனைகளையும் தலை சாய்த்து ஏற்க - கங்கா பதைபதைக்க நிற்கிறாள்.

அன்றிரவு...

மாடிக்குப்போன சுந்தரம் வெகுநேரம் வரையில் கீழே இறங்கி வரவில்லை...

சுடலை கூட வீட்டுக்குப் போய்விட்டான்.

இப்பொழுதெல்லாம் வேலைக்காரர்களை சீக்கிரமே வேலையை முடித்துக்கொண்டு கிளம்பிவிடச்சொல்லிவிட்டாள் அவள்.

இரண்டு டிரைவர்கள் ஷிப்டில் இருப்பார்கள். அவசரத்தேவை என்றால் ஒருவன் காரை எடுத்துகொண்டு போய் சுடலையைக் கூட்டி வருவான். சமையல்காரனும் வேலைக்காரியும் பங்களாவை ஒட்டியுள்ள இவர்களுக்கெனக் கட்டப்பட்டுள்ள வீடுகளில்...

மற்றபடி இரவு சாப்பாடு போடுவதோ, சாப்பிட்ட பின் எடுத்து வைத்து சுத்தம் செய்வதோ எல்லாமே கங்காதான்.

பப்லு கீழே இறங்கி வந்து சாப்பிட்டதே கிடையாது... எல்லாமே மாடியில்தான்.

இரவு சாப்பாடு, கங்காவுக்கும் சுந்தரத்துக்கும்தான்.

பப்லு ஹோட்டலுக்குப்போய் குடித்துவிட்டு வருவதால் சமீப காலமாக சுடலை வீட்டிலேயே தங்கி, பப்லுவுக்கு கார் ஓட்டிக்கொண்டிருந்தான்.

இரண்டு நாட்களாக பப்லு, ஹோட்டலுக்குப் போக வேண்டிய அவசியமே இல்லாதபடி சுந்தரம் செய்துவிட்டான்.

அவள் கேட்டதை எல்லாம் மாடியில் உள்ள அவளது அறைக்கே கொண்டு வந்து குவித்துவிட்டான்.

கங்கா, சுந்தரத்திடம் மெதுவாய், தணிந்த குரலில் ஆட்சேபணையைத் தெரிவித்தாள்.

''என்னங்க... இது சரியில்லை. அந்தப் பெண்ணைத் தேடிக் கண்டு பிடிச்சு வீட்டுக்கு அழைச்சிட்டு வந்து... இப்படி கெட்டுக்



குட்டிச்சுவராக்கறதா உங்களோட நோக்கம்?''

''இல்லே கங்கா. ஆனா... வேற வழியும் தெரியலையே.. இப்போதைக்கு அவ என்னை விட்டுப் போயிடக்கூடாது கங்கா. அவ என்னோட ரத்தம். என்னோட உயிர்... யோசிச்சுப்பாரு... நான் பெத்த குழந்தை சாப்பாட்டுக்கே வழியில்லாம பெங்களூர் ஹோட்டல்லே ஆடிப் பிழைச்சிட்டிருந்தா என்னால நிம்மதியா இருக்க முடியுமா?''

''அதுக்காக, பெத்த பொண்ணு கேட்கறாங்கறதுக்காக, விஸ்கி வாங்கிக் கொடுக்கற அப்பாவை நான் இதுநாள் வரைக்கும் பார்த்ததில்லை...''

கங்கா, இதைச் சொல்லி விட்டு நகர்ந்து விட்டாள்.

இன்றோ...

மாடிக்குப்போனவன் இன்னும் கீழே வரவில்லை என்றால்...

இதற்கு மேல் தாங்க முடியவில்லை அவளால்... இதுநாள் வரையில் அப்பாவும், பெண்ணுமாய் பேசிக்கொண்டிருக்கையில் - பேச்சென்ன வாழ்கிறது... அவள் கட்டளையிடுவாள். இவன் கைகட்டி வாய் பொத்தி 'சரி சரி' யெனத் தலையாட்டுவான் - இதன் நடுவில் கங்கா தலையிட்டதே இல்லை.

இன்று, அந்த நாகரீகம், நாசூக்கு பார்க்க எல்லாம் நேரமேயில்லை.

விழுந்தடித்துக்கொண்டு மாடிக்கு ஓடினாள்.

அங்கே...

அவள் கண்ட காட்சி..

சுந்தரம் விஸ்கியுடன் சோடா கலந்து மகளுக்கும் கொடுத்துவிட்டு தானும் ஒரு கண்ணாடி கோப்பையைக் கையில் வைத்திருந்தான்.

எதிர்பாராமல் கங்காவைக் கண்டதும், அவன் தடுமாறி எழுந்திருக்க - பப்லு, அவன் கரத்தைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தாள்.

உச்சந்தலை வரையில் சூடாகிவிட்டது கங்காவுக்கு... என்ன செய்கிறோம் என்கிற உணர்வே இல்லாமல் சுந்தரத்தின் கையிலிருந்த கோப்பையைப் பிடுங்கி எறிந்ததுடன் நில்லாமல் பப்லுவின் பளிங்குக் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தாள்.

''அ...ம்...மா...''

பப்லுவின் 'கிறீச்'சிட்ட குரல் சுந்தரத்தை உசுப்பி விட - அவன், கங்காவின் பின் கழுத்தில் கை கொடுத்து கீழே தள்ளினான்.

ஏற்கனவே கொஞ்சம் குடித்திருந்ததாலோ என்னவோ சுந்தரத்தின் கண்கள், ஜிவுஜிவுவென்றிருந்தது.

''என் குழந்தையையா அடிச்சே... இரு...இரு... உன்னை...''

அவன் உக்கிரமாய் நிற்க, பப்லுவோ ஆத்திரத்துடன் கோப்பையைத் தூக்கி கங்காவின் மீது எறிந்தாள்.

''ஐ ஹேட் யூ... ஐ ஹேட் யூ..... ஒரு அப்பாவும் பொண்ணும் சேர்ந்து உட்கார்ந்து டிரிங்க் பண்ணறதுங்கறது பெங்களூர்ல சகஜம்... பாம்பேயில ரொம்பவும் கேஷுவலான விஷயம்... அது ஒரு பக்கம் இருக்கட்டும். இவ யார் என்னை அடிக்க...?''

சுந்தரம் கைகளைப் பிசைய - கங்கா, நெற்றியில் கண்ணாடிச் சில்லு

பதிந்ததால் பெருகிய ரத்தத்தைப் புடவைத் தலைப்பால் ஒற்றியபடி எழுந்து நின்றாள்.

''நான் யாருன்னு அவரைக் கேட்காதே... சொல்ற நிலையில் அவருமில்லே... கேட்கற நிலையில நீயும் இல்லே... நான் சொல்றேன்... மூளையில பதிஞ்சாக் கேட்டுக்க... பதினாறு வருஷங்களுக்கு முன்னே நான், இவரைப் பார்த்தபோது குடிச்சுக் குடிச்சு குடல் சிதைஞ்சு போயிருந்தார். வயித்து வலியில புழுவாத் துடிச்சிட்டிருந்தார். டாக்டர் சொன்ன அட்வைஸ்படி அவருக்கு ஆல்கஹால் நினைவே வராதபடி நான் நடந்துட்டேம்மா... அடிப்பார் - வாங்கிட்டேன். அசிங்கமாகத் திட்டுவார் - சகிச்சுக்கிட்டேன். இதோ, இப்ப பார்த்தியே... இது மாதிரிதான். கழுத்தைப் பிடிச்சு வெளியிலத் தள்ளுவார். வாசல் வழியாப் போயிட்டு கொல்லை வழியா மறுபடியும் இந்த வீட்டுக்குள்ளே வருவேன்...''

''..........''

''இத்தனையும் எதுக்காகன்னு கேட்கறியா...? இந்த மனுஷரை, எமன் கையிலே இருந்து மீட்கறதுன்னு ஒரு சபதமெடுத்துட்டேன். அதை நிறைவேத்திட்டேன்கற கர்வத்துல தலை நிமிர்ந்து வளைய வர்றேம்மா நான்...''

''..........''

''இப்ப மறுபடியும் இவர் இந்தப் பழக்கத்துக்கு அடிமையாயிட்டா... உனக்கென்ன... நீ போயிடுவே - உங்க அம்மாவை மாதிரி. உனக்கு இவரோட உயிரைப்பத்தி அக்கறையில்லே. இவர் இருந்தாலும் இல்லையின்னாலும் உனக்கு நஷ்டம் எதுவுமில்லே... ஆனா...ஆனா... நான்தான் தாலி கட்டாமலேயே இவரோட பதினாலு வருஷம் வாழ்ந்த வாழ்க்கைக்காக விதவையாவேன்...''

அவள், சுந்தரத்தின் கரத்தைப் பிடித்து தன் தோளில் வைத்து, அவன் இடுப்பில் ஒரு கை கொடுத்து மெள்ள, தன்னுடன் அழைத்துப்போக முயற்சிக்கிறாள்.

''சுந்தரம்... நீ இப்ப அவ கூடப் போனா என்னை இன்ஸல்ட் பண்ணின மாதிரி ஆயிடும். எங்கே... தைரியமா என்னைப் பார்த்து சொல்லு... உனக்கு நான் வேணுமா... அவ வேணுமா..?''

சுந்தரம் ஒரு கணம் தயங்கினான்.

பப்லுவைப் பார்த்து அசடு வழியச் சிரித்தான்.

''கோவிச்சுக்காதே பப்லு. நான் வேணுமானா அவளைக் கீழே போகச் சொல்லிடறேன். நான் சொன்னா அவ கேட்பா. ரொம்ப நல்லவ.... என்னவோ இன்னிக்கு... பப்லு... இந்த ஒரு தடவை அவளை மன்னிச்சிடேன்.. நான் வேணுமானா அவளை ஸாரி கேட்கச் சொல்லட்டுமா..?''

கங்கா, தன் தோளிலிருந்து அவன் கரத்தை எடுத்தாள்... தனது கரத்தையும் நகர்த்திக் கொண்டாள்.... மௌனமாய், அறை வாசலை நோக்கி நடந்தாள்.

''பாரு சுந்தரா... அவளுக்கு ரொம்பத்தான் திமிரு...''



''இல்லே பப்லு... அவ கோவிச்சுட்டுப் போறா...''

''போகட்டும்... இப்ப சொல்லு... உனக்கு நான் வேணுமா.. அவ வேணுமா..?''

இந்தக் கேள்விக்கு அவன் என்ன பதிலைச் சொல்லப் போகிறான் என்று கேட்கப் பிடிக்காமல் கங்கா அந்த அறையைவிட்டு, வீட்டை விட்டு விலகி நடந்தாள்.

---

## 4

---

**சு**த்தமாய் செயலிழந்து நின்றான் சுந்தரம்.

இரவு தனது படுக்கைக்குத் திரும்பிய போது பழக்க தோஷத்தில் அவனது கரம் பக்கத்துப் படுக்கையைத் துழாவாமல் இல்லை... உள்ளூர, பாட்டரி தீர்ந்து போன டார்ச் மாதிரி மங்கலான நினைப்பு...

''கோவம் போல... இருக்காதா... பாவம்... எங்கே போயிருப்பா....''

இதற்கு மேல் நினைவு ஓடவில்லை... ஆழ்ந்த உறக்கம்தான் நள்ளிரவு மூன்று மணி வரையில்...

சரியாய்... மூன்று மணிக்கு விழிப்பு வந்தது. குடித்த மது ஏப்பமாய் வந்தது. பின்மண்டையில் வலி அழுத்தியது. போதை - தெளிந்து 'விருட்'டெனப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான் அவன்...

''கங்கா... கங்கா... எங்கே போயிட்டே...''

ஊஹூம்.... கங்கா, கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து நிற்பாளே...

'சட்'டென முதல் நள்ளிரவு நடந்ததெல்லாம் நினைவுக்கு வர...

''ஐயோ.. என்ன காரியம் செஞ்சிட்டேன்...''

அவன், வேகமாய் வாசலுக்கு ஓடி வந்தான்... டிரைவர்கள் இருவரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வெளிவாசல் இரும்பு கேட்டுக்குப் பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்த கூர்க்கா... காலடி ஓசை கேட்டு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான்...

''ராம்சிங்... கங்கா பார்த்தியா?''

''எஸ் சாப்....''

கூர்க்கா, தனது கால் சட்டைப்பையினுள் வைத்திருந்த கடிதத்தை எடுத்து நீட்டினான்.

நான்காக மடிக்கப்பட்டிருந்த வெள்ளைத்தாளில் நாலே வார்த்தைகள்....

**அன்புள்ளவருக்கு... போய் வருகிறேன்... கங்கா...**

பைத்தியம் பிடிக்காத குறைதான் சுந்தரத்துக்கு. இதற்குப்பின் அந்த பங்களாவே விழித்துக்கொண்டுவிட்டது - பப்லுவைத் தவிர...

''டேய்... ஓடிப்போய் சுடலை முத்துவை அழைச்சிட்டு வா...''

''சரிங்க...''

''இரு... நீ மட்டும் போக வேணாம்... நானும் வர்றேன்...''

சுந்தரத்துக்குள் ஒரு நப்பாசை... ஒரு வேளை கங்கா... சுடலையின் வீட்டில் இருப்பாளோ என்று...

ஆனால் அங்கு போன பின்தான் தெரிந்தது கங்கா அங்கேயும் வரவில்லை என்பது...

சுடலை முகத்திலறைந்து கொண்டு அழுதான்.

''அய்யா... என்னங்க இப்படி செஞ்சிட்டீங்க... இத்தனை நாளும் உங்களோட இருந்த மகாலட்சுமிய விரட்டி விட்டுட்டீங்களே... எனக்குத் தெரிஞ்சு கங்காம்மாவுக்கு கோபமே வந்தது கிடையாதே... இப்ப எங்கேய்யா போய் தேடறது...''

சுந்தரம் மலங்க மலங்க விழித்தான்.

எங்கே போய் தேடுவது?

சத்தியமாய் அவனுக்குத் தெரியவில்லை...

இதுவரையில்... உறவு என்று சொல்லிக்கொண்டு கங்காவைத் தேடி யாரும் வந்ததில்லை; இவளும் போனதில்லை.

'ஒருவேளை தாங்க முடியாத துக்கத்தினால் தற்கொலை முயற்சியில் இறங்கி இருப்பாளோ...?'

'ஐயோ!'

சுந்தரம் தனது வயது - அந்தஸ்து - கௌரவம் அத்தனையையும் மறந்து, 'ஓ'வென வாய்விட்டு அழுகிறான்.

சுடலைதான் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது.

''அய்யா... வாங்க வீட்டுக்குப் போவோம். எனக்கு என்னமோ அம்மா அப்படி எதுவும் செஞ்சுக்க மாட்டாங்கன்னு தோணுது. நீங்க மனசு தளர்ந்துடாதீங்க அய்யா...''

சுந்தரம் சுடலையின் தோளில் சாய்ந்து அழுதான்.

''சுடலை... எனக்கு மறுபடியும் குடிக்கணும்கற ஆசை இல்லேப்பா... அந்தப்பொண்ணு பப்லுவை - வெளியில போய் சுத்தாதபடி வீட்டுலேயே இருக்க வைக்கணும்னு நினைச்சேன். ஆனா... ஆனா...''

''குழந்தைங்க சகதியில விழுந்து விளையாடணும்னு ஆசைப்படும். அதுக்காகப் பெத்தவங்களும் சேத்தை வாரிப் பூசிக்க முடியுமா.... பளார்னு கன்னத்துல நாலு கொடுத்து 'பொம்பளையா லட்சணமா இருடி'யின்னு சொல்லாம... அது வீட்டுலஉட்கார்ந்து குடிக்க நீங்க கம்பெனி கொடுக்கணுமா? நல்லாயிருக்கு அய்யா... 'அப்பன்-மக' உறவு... நானாயிருந்தா இப்படியொரு பொண்ணு எனக்குப் பொறக்கவே இல்லையின்னு நினைச்சு தலை முழுகியிருப்பேன்...''

''அது எப்படி சுடலை... பப்லு என்னோட குழந்தை இல்லையா?''

''அய்யா... கேட்கறேனுன்னு தப்பா எடுத்துக்காதீங்க... ராணியம்மா உங்ககிட்ட உண்மையா இருந்து, இந்தக் குழந்தை அவங்களுக்குப் பொறந்திருந்தா நீங்க நினைக்கறது நியாயம். அவங்க அந்த நாளுலே சுத்தாத இடமில்லே... இந்தக் குழந்தை உங்களுக்குப் பொறந்ததுதான்னு எதை வச்சு சொல்றீங்க... நெத்தியில லேபிள் எழுதி ஒட்டிட்டாப் பொறந்தது...?''



''சுடலை... அப்படிச் சொல்லாதே. எந்த நாளுலேயும் பெண்மைய இழிவு படுத்தக்கூடாது. அவ எப்படி வேணுமானாலும் இருந்திருக்கலாம். ஆனா, குழந்தை என்னோடது... அது எனக்கு நிச்சயமாத் தெரியும்...''

சுடலை பெருமூச்செறிந்தான்.

'பெண்மையை இழிவு படுத்துகிற ஆண்களிடையே இப்படியொரு மனிதனா?'

அவன் தொண்டை கரகரக்கச் சொன்னான்...

''அய்யா..! நீங்க எப்படி பெண்மைய மட்டம் தட்டக்கூடாதுன்னு நினைக்கறீங்களோ, அதே மாதிரி ராணியம்மாவுக்கும் ஆண்மைய மதிக்கத் தெரிஞ்சிருக்கணுமில்லையா? இப்பேர்ப்பட்ட புருஷன் பூலோகத்துல கிடைப்பாரா...? அருமை தெரியலையே அவங்களுக்கு? ஆனா, உங்களையே தெய்வமா நினைச்சு - உங்க நிழல்லேயே இருந்தாங்களே... கங்காம்மா... அவங்களோட மதிப்பு உங்களுக்குத் தெரிஞ்சுதா? இதைத்தான் பெரியவங்க சொல்லுவாங்க... காலடியில உள்ள மூலிகை, கண்ணுக்குத் தெரியாதுன்னு...''

சுந்தரம் பதில் பேசவில்லை.

சுடலையின் வார்த்தை ஒவ்வொன்றிலும் புதைந்து கிடந்த உண்மை அவனை நெருப்பாய் சுட்டது.

இரண்டு நாட்கள்... மலையைப் புரட்டித் தள்ளுகிற மாதிரி நாற்பத்தியெட்டு மணி நேரத்தை அவன் நகர்த்துவதற்குள்...

மாடி அமர்க்களப்பட்டது. பப்லு, பெங்களூரில் இருந்து தனது நண்பர்களை வரவழைத்திருந்தாள். ஒவ்வொருவனும் மீசையும் தாடியுமாய்... மாடி முழுக்கப் புகை மண்டலம். அட்டகாச சிரிப்பு. அரை மணிக்கொருதரம் தட்டு தட்டாய் நொறுக்குத் தீனி... எல்லாவற்றையும் விடச் சகிக்க முடியாதது... விடியவிடிய இவர்கள் குடித்து விட்டு ஆடும் ஆட்டம்.

சகிக்க முடியாதவனாய் சுந்தரம் காதைப் பொத்திக்கொண்டு அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தான். சரியான சாப்பாடில்லை. தூக்கமில்லை. வேலையாட்களுக்கோ அவனை நெருங்கவே பயம்.

சுடலை மட்டும்தான் உரிமையோடு அவன் அறைக்குள் போய் வருபவன்.

''அய்யா, மில்லுலேயிருந்து மானேஜர் வந்திருக்காரு...''

''அப்புறமாய் வந்து பார்க்கச் சொல்லு.. போ...''

''நீங்க நேத்திக்கே பம்பாய் கிளம்பிப் போயிருக்கணுமாமில்லே... நாளைக்கு லண்டன் போக டிக்கெட் எடுத்துட்டு... இங்கே உட்கார்ந்து...''

''எல்லாத்தையும் கேன்சல் பண்ணு சுடலை...''

''......''

''சுடலை...''

''அய்யா...''

''எனக்கு பிளட் பிரஷருக்கு என்ன மருந்து சாப்பிடுவேன்னு உனக்குத்

தெரியுமா?''

''தெரியாதேங்க... ஏங்க... உடம்பு என்ன செய்யுது? நான் வேணுமானா டாக்டரை அழைச்சிட்டு வரட்டுமா...?''

''த்ச். வேணாம்பா.. எனக்கு எதுவுமே தெரியலே சுடலை. என் மாத்திரை... மருந்து... என் புரோகிராம்... என் சாப்பாடு... எது எப்படியின்னு ஒண்ணுமே புரியலே சுடலை... எனக்கு கங்கா வேணும் சுடலை...''

''இதோ கூட்டிட்டு வர்றேங்க...''

அவன் சொன்ன வார்த்தைகளில் துள்ளி நிமிர்ந்து உட்காருகிறான் சுந்தரம்..

''சுடலை... நீ என்ன சொல்றே...? கங்கா வந்துட்டாளா..?''

''அய்யா... என்னை மன்னிச்சிடுங்க...''

''எதுக்கு சுடலை..? முதல்லே கங்கா எங்கே..?''

''கங்காம்மா உங்களை விட்டு எங்கேயும் போயிடல்லேங்க.. பாதி ராத்திரியில அழுதிட்டே வந்து, என்கிட்ட நடந்ததைச் சொன்னாங்க... 'இத்தனை வருஷத்துல அவரைப் பிரிஞ்சு நான் இருந்ததே இல்லை சுடலை. எங்கே போறதுன்னு கூடத் தெரியலே... ஆனா கடுதாசி எழுதிக்கொடுத்திட்டு வந்திட்டேன்'னு புலம்பினாங்க...''

''..........''

''நான் தான் சொன்னேன்.. 'ஆரம்ப காலத்துல அய்யா குடிக்கறதைத் தடுத்தீங்கன்னா அவர் இப்படித்தானேம்மா விரட்டி விடுவாரு... அப்ப எல்லாம் என்ன செஞ்சீங்களோ. அதையே இப்பவும் செய்யுங்கள்ளேன்னு...' என்ன புரியல்லையா?''

''..............''

''வாசல் வழியா வெளியேறிவிட்டு புழக்கடை வழியா திரும்பி வந்ததில்லையா கங்காம்மா? அதையேதான் இப்பவும் செஞ்சிருக்காங்க... ஆனா ஒரேயொரு வித்தியாசம்... இப்ப அவங்க.. இந்த பங்களாவுக்குள்ள வரல்லே.. தோட்டத்துல இருக்கற வேலைக்காரங்க தங்கற விடுதியில இருக்காங்க. அரை மணிக்கொரு தடவை உங்களைப் பத்தி விசாரிச்சு தெரிஞ்சுக்கறாங்க... 'மாத்திரை மருந்து சாப்பிடாம இருக்கக்கூடாது சுடலை... அதுக்காகவாவது அய்யாவை சாப்பிட வை. அப்படி இன்னிக்கும் ஒழுங்காச் சாப்பிடலையின்னா நான் தாங்க மாட்டேன்... ஓடி வந்துடுவேன்'னு .... இதோ வந்துட்டாங்களே...''

சுடலை, கங்காவைப் பார்த்துச் சிரித்தான். அவளோ, ஒரு தம்ளர்ல தண்ணீரும் மாத்திரைகளையும் எடுத்து வந்து சுந்தரத்தின் கரத்தைப் பற்றி வைக்கிறாள்.

''கங்கா...''

''முதல்லே மருந்தைச் சாப்பிடுங்க... அப்புறம் பேசலாம்...''

''என்னை... என்னை...மன்னிச்சிடு...''

அவன் அதற்கு மேலும் பேசாதபடி, உதட்டில் கை வைத்து சைகை காட்டினாள் அவள்... ஆனாலும் அவளையும் மீறி கண்ணீர் வழிந்து கொண்டுதான் இருந்தது...

மாடியிலிருந்து இரைச்சல் அதிகமாக, சுந்தரம் அந்தக் கணமே



தீர்மானித்து விட்டான்.

# 5

**கா**ர், பெங்களூரை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. பின் சீட்டில் பப்லுவின் நண்பர்கள்; டிரைவர் சீட்டுக்குப் பக்கத்தில் பப்லு...

சுடலைதான் காரை ஓட்டிக்கொண்டிருந்தான்.

வெகு நேர மௌனத்துக்குப் பிறகு.. பப்லு, மெள்ள வாய் திறந்தாள்.

''சுடலை... இப்ப திருப்திதானே...?''

''என்ன சொல்றீங்க...?''

பப்லு சிரித்தாள். வெய்யிலும் மழையும் ஒரே சமயத்தில் வருவதைப்போல அடர்ந்த இமைகளில் ஈரமும் பளபளத்தது.

''சுடலை... எங்கம்மா உன்னைப் பத்தியும், அப்பாவைப் பத்தியும் நிறையச் சொல்லியிருக்காங்க...''

''யாருங்க ராணியம்மாவா?''

சுடலையின் குரல், வியப்பில் திக்கியது.. அவளோ சிரித்தபடி தலையாட்டினாள்.

''உம்... ராணியம்மாவேதான். ஒரு காலத்துல எங்க அம்மா எப்படியிருந்தாங்க... என்னை வயித்துல சுமந்தப்ப, கருவைக் கலைக்கறதுக்காக எப்படியெல்லாம் அலைஞ்சாங்கன்னு கதை கதையாச் சொல்லியிருக்கா... ஆனா, அம்மாவுக்குப் பிடிக்காத என்னைக் கலைக்கிறதுனாலே அம்மாவோட உசிருக்கே ஆபத்து வந்திரும்னு டாக்டருங்க சொன்னதிலே பயந்துட்டு அப்படியே விட்டுட்டாங்க... பிறந்தவுடனே எல்லா அம்மாக்களுக்கும் வர்ற பாசம்... அவளுக்கும் வந்திருச்சு...''

''நிசம்மாவா... ராணியம்மாவுக்கா... அப்பவே திரும்பி வந்திருக்கலாமே..?''

''எங்கே...என் மேல பாசம் ஒரு பக்கம்.. விளம்பரம், சினிமா மோகம் ஒரு பக்கம்.... நடுநடுவே திரும்பி வந்திடலாமாங்கற ஏக்கம் வேற... மொத்தத்துல எங்கம்மா தன் வாழ்க்கையை சிதைச்சிட்டது மட்டுமில்லாம என் வாழ்க்கையையும் பாழடிச்சது தான் மிச்சம்...''

பப்லு, கண்களை மூடி ஒரு கணம் மௌனமாகி பிறகு தொடர்ந்தாள்.

''அம்மாவுக்கு குடும்ப வாழ்க்கை ஒத்து வரல்லே சுடலை... மனசு மாறினது கூட, கையில காசில்லாத காரணம்தான்... நாலஞ்சு வருஷமாவே, அம்மா, 'அப்பாவோட அட்ரஸ் தர்றேன்... போய்ப் பாரு... கண்டிப்பா உதவுவாரு'ன்னு நச்சரிச்சுட்டேதான் இருந்தா... நான்தான் 'மாட்டேன்'னு சொல்லிட்டேன்...''

சுடலை காரை ஒரு ஓரமாக நிறுத்தியேவிட்டான்.

''பப்லும்மா... நீ என்ன சொல்றே?''

பப்லு காற்றில் பறந்து முன் நெற்றியில் படர்ந்த குழற்கற்றையைப் புறங்கையால் ஒதுக்கியபடியே சொன்னாள்.

''ஆமா... நான் எந்த முகத்தை வச்சிட்டு அவர் கிட்டப் போவேன்... 'நீ யாருடி'யின்னு கேட்டுட்டார்னா.. அந்த அவமானம் வேற தேவையா... அதனால ஏதோ ஒரு ஹோட்டல்லே 'ரிசப்ஷனிஸ்ட்' வேலை கிடைச்சது.. சேர்ந்து எப்படியோ சமாளிச்சேன். என்ன பார்க்கறே. நீ நினைக்கிற மாதிரி நான் தப்பான வேலை எதுவும் செய்யலே... என்னோட வந்திருக்கிற இந்த மூன்று பேரும் பெங்களூர்லே என் கூட வேலை பார்க்கற என் ஃபிரண்ட்ஸ். ரொம்ப நல்லவங்க...''

சுடலை வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தான். அவளோ, அவனது திகைப்பைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் பேசிக்கொண்டே போகிறாள்.

''சுடலை...'திடீர்'னு ஒரு நாள் அப்பா என்னைத் தேடி வந்தப்ப நான் ரொம்பவும் சந்தோஷப்பட்டேன். காரணம் என்ன தெரியுமா? அம்மாவுக்கு உடம்பு ரொம்ப அதிகமாகி அவங்களை ஆஸ்பத்திரியிலே சேர்த்திருந்தேன். நிறைய பணம் வேண்டியிருந்தது...''

''என்ன சொல்றே பப்லு? ராணியம்மா இருக்காங்களா...? உயிரோட இருக்கறப்பவேயா செத்துட்டதாச் சொன்னே...''

அவன் கத்தியே விட்டான். மெல்லிய தேகம் பதறியது.

''நிதானம்... நிதானம் சுடலை. எந்த நேரத்துலேயும் பொறுமைய இழக்கக்கூடாது. அந்த நிமிஷம் எனக்கு உடனே பணம் தேவை. அப்பாவை ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டுப் போனா அம்மா அழுது அமர்க்களம் செஞ்சு அவர் மனசை உருக்கிடுவா. அவரோட இரக்க சுபாவத்தைப் பத்தியும் தனக்காக அவர் எத்தனையெல்லாம் சகிச்சிட்டிருக்கார்னும் நிறைய, அம்மா சொல்லியிருக்கா. இப்ப அப்பாவைப் பார்த்தா விட மாட்டா. அவராலேயும் தாங்க முடியாது. அவருக்கு இருக்கற பணத்துக்கு உலகத்துலேயே மிகச் சிறந்த வைத்தியத்தை அம்மாவுக்கு அவராலே தர முடியும். ஆனா, அத்தனை முயற்சியும் வீண். கொஞ்சம் தெம்பு வந்துடுச்சன்னா அம்மா மறுபடியும் பாருக்குப் போவா... பணத்தைத் தண்ணியாச் செலவழிப்பா...''

பப்லுவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் சுடலை.

பெங்களூரிலிருந்து கிளம்புவதற்கு முன் அவள், சுந்தரத்திடம் பணம் வாங்கியது அம்மாவின் மருத்துவச் செலவுக்காகத்தான். 'ஒரு மாதத்துக்கு மேல் தங்க மாட்டேன்' என்று கூறியதும் அம்மாவின் உடல் நலத்துக்காகத்தான்.

பணத்துக்காக இல்லாவிட்டாலும் இதுநாள் வரையில் அப்பா என்கிற மனிதரை பார்த்தே இல்லாத காரணத்தினால் அவருடன் சிறிதுநாள் இருக்க வேண்டும் என்கிற ஆசையினால் புறப்பட்டு வந்த பப்லு, அப்பொழுதே தன்னால் அப்பாவின் குடும்பமோ, எதிர்காலமோ கெடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள்.



''எங்கம்மாவாலே பட்ட கஷ்டம் போதாதா... புதுசா நான் வேற வந்து - அவருக்கு இருக்கற நிம்மதி போகணுமா? நான் நல்ல பெண்ணா - பாசத்துக்குக் கட்டுப்பட்டவளா இருந்தா அப்பாவுக்கு என்னைப் பிரிய மனசு வராதே...''

அவள் கலகலவெனச் சிரித்தாள்.

''வந்து பார்த்தா, இங்கே அப்பாவுக்காக ஒரு நந்தவனமே வாடி வதங்கிட்டு இருக்கு. இதை விட்டுட்டு அப்பா ஏன்... பழசையே நினைச்சிட்டு இப்படி அலையறார்னு ஆச்சரியமா இருந்தது... பார்த்தேன். இந்தப் பாசக்கயிறை அறுக்கணும்னா அதுக்கு ஒரே வழி, நானும் எங்கம்மா மாதிரி பொறுப்பில்லாத, குடிச்சிட்டு ஊரைச் சுத்தறவளா நடிக்க வேண்டியதுதான்னு தீர்மானிச்சேன். ஊருலே இருந்து என் ஃபிரண்ட்ஸை வரவழைச்சது... அப்பாவையும் என் கூட உட்கார்ந்து குடிக்கச் சொன்னது... எல்லாம் என் மேல வெறுப்பு வரணும்னுதான்...''

''பப்லும்மா...''

சுடலை கைகள் நடுங்கக் கும்பிட்டான்.

''சுடலை... இப்ப ஒண்ணும் மோசமாயிடல்லே. இத்தனை நாளாப் பார்க்காத அப்பாவைப் பார்த்துட்டேன். அவரோட அன்புக்கும் பாசத்துக்கும் எங்க அம்மா மட்டுமில்லே... நானும் அருகதை இல்லேயின்னு தோணிடுச்சு. கங்காதான் சரி... இதப்பாரு... அப்பாவை நான் இத்தனை பாடு படுத்தியும் அவராலே என்னை வெறுங்கையோட அனுப்ப முடியல்லே... அப்பப்பா... அது என்ன பாசம்பா... இன்னும் கொஞ்ச நாள் தங்கியிருந்தா எனக்குமே அவரைப் பிரிய மனசு வராமப் போயிருக்கும்....''

அவள் கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்தபடி கூறினாள்.

''எப்படியோ... பாலைவனத்தையே பார்த்துப் பழகிப்போன எனக்கு பசுமையப் பார்க்கற சந்தர்ப்பம் கிடைச்சதுக்கு கடவுளுக்குத்தான் நன்றி சொல்லணும். ஆனா சுடலை.... இது பத்தி நீ அப்பாகிட்ட மூச்சு விடாதே... அவர்வரைக்கும் அடங்காப்பிடாரிப்பொண்ணை, லட்சக்கணக்கான பணத்தைக் கொடுத்து 'செட்டில்' பண்ணினதாகவே இருக்கட்டும். இந்த பணம் எனக்காக இல்லையானாலும் எங்கம்மாவை மறுபடியும் எழுப்பி உட்கார வைக்கவாவது உதவட்டும்.''

அவள் இவனைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள். ''இருந்தாலும் மனசளவுல அப்பாவைக் கொண்டிருக்கேன். என் அம்மாவாலே எனக்கு தினமும் பிரச்சனை தான்னாலும் அவ எப்படியோ போகட்டும்னு என்னாலே விட முடியலே பாரு...''

சுடலை அந்த நிமிடமே பப்லுவின் காலில் விழுந்து வணங்கத் துடித்தான். வயது தடுத்தது....

***